வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 22.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை இந்தியாவின் பாதுகாப்பு உத்திகளுக்கு, புதுப் பரிமாணம் வழங்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் முக்கிய பங்களிக்கும் என்று, இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் கூறி உள்ளார்.
- தமிழ் மண், மொழி மற்றும் பண்பாட்டை, பிரதமர் திரு நரேந்திர மோடி எப்போதுமே மதித்து வந்திருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.
- புதுச்சேரியில் புதிதாகப் பிறந்த பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வங்கிக் கணக்கு அட்டைகளை, அமைச்சர் திரு ஜெயக்குமார், இன்று பயனாளிகளிடம் வழங்கினார்.

<u>*மோடி-பீகார்*</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம் புத்தகயாவில் நடைபெற்ற விழாவில் மொத்தம் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். 600 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம், கங்கை நதியின் குறுக்கே 6 வழி மேம்பாலம் ஆகிய திட்டங்களும் இதில் அடங்கும். பீகாரிலும் மத்தியிலும் உள்ள இரட்டை எஞ்சின் அரசு மாநிலத்தின்

வளர்ச்சியில் உறுதிப்பாடு கொண்டுள்ளதாக விழாவில் பேசுகையில் பிரதமர் கூறினார்.

*மோடி-பீகார்-*

மத்திய அரசு அண்மையில் தொடக்கி உள்ள பிரதமரின் விக்சித் பாரத் வேலை வாய்ப்பு திட்டத்தினால் குறிப்பாக பீகார் மாநில இளைஞர்கள் பயன் பெறுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். பீகாரில் உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்புகளை திருடுவதே, ஊடுறுவல் காரர்கள் தான் என்றும், ஓட்டு வங்கி அரசியல் காரணமாகவே காங்கிரஸ், ஆர்ஜேடி ஆகிய கட்சிகள் இதை ஊக்குவிப்பதாகவும் பிரதமர் குற்றம் சாட்டினார். இக்கட்சிகளின் தலைவர்கள் பலரும் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி ஜாமினில் உள்ளவர்கள் தான் என்றும், ஊழலுக்கு எதிரான அரசியல் சாசன திருத்த சட்டத்தை இவர்கள் எதிர்ப்பதற்கு இதுவே காரணம் என்றும் அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை இந்தியாவின் பாதுகாப்பு உத்திகளுக்கு, புதுப் பரிமாணம் வழங்கி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். இனி தீவிரவாதிகள் பாதாளத்தில் ஒளிந்து கொண்டாலும், இந்திய ஏவகணைகள் அவர்களை அங்கேயே புதைக்கும் என்று அவர் குறிப்பிட்டார். விழாவின் போது கயா-டெல்லி அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில், மற்றும், வைசாலி-கோடர்மா இடையிலான பவுத்த சுற்றுலா வட்ட ரயிலையும் பிரதமர் மெய்நிகர் முறையில் கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

*ராஜ்நாத் சிங்*

இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி துறையை அரசு திறந்துவிட்டு இருப்பதால், வெளிநாட்டு நிறுவனங்களை பெரிய அளவில் ஈர்க்கவும், உள்நாட்டு தனியார் நிறுவனங்கள், உலக அந்தஸ்துக்கு உயரவும் ஏதுவாகும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி

உள்ளார்.இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியாவின் பாதுகாப்பு துறை சிறக்க தேவையான புதுமை படைப்புகளை ஊக்குவிக்கவே, iDEX திட்டம் தொடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். முன்னதாக, ஐ நா பெண் ராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றை, பாதுகாப்பு அமைச்சர் நடத்தினார். ஐ நா அமைதி காக்கும் படைகளில் பெண்கள் ஒருங்கிணைந்து பங்கேற்பதை, இந்தியா எப்போதுமே ஆதரித்து வந்துள்ளதாக அவர் கூறினார். 15 நாடுகளைச் சேர்ந்த பெண் ராணுவ அதிகாரிகள் இக்குழுவில் இடம் பெற்றனர்.

<u>சுபான்சு-முர்மு</u>

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்று திரும்பியுள்ள முதலாவது இந்திய விண்வெளி வீரர் குரூப் கேப்டன் சுபான்சு சுக்லா, இன்று புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்து, தமது விண்வெளி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இஸ்ரோ தலைவர் டாக்டர் வி நாராயணன், மானுட விண்வெளி பயணத்தின் இயக்குநர் திரு தினேஷ் குமார் சிங், ககன்யான் விண்வெளி திட்டத்துடன் தொடர்புடைய குரூப் கேப்டன் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், குரூப் கேப்டன் புண்யஸ்லோக் பிஸ்வால் ஆகியோர் இந்த சந்திப்பின் போது உடன் இருந்தனர். ககன்யான் உட்பட அனைத்து எதிர்கால விண்வெளித் திட்டங்களிலும் இவர்கள் வெற்றி பெற குடியரசு தலைவர், இந்த சந்திப்பின் போது வாழ்த்து தெரிவித்தார்.

<u>சுபான்சு-முர்மு-சேர்க்கை</u>

முன்னதாக இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன் இன்று புதுடெல்லியில் இஸ்ரோ தேசியக் கூட்டத்தின் தொடக்க விழா அமர்வில் பேசுகையில் 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்

கழகம் முக்கிய பங்களிக்கும் என்றார். 2 செயற்கை கோள்களை விண்ணில் வைத்தே பிரித்து மீண்டும் ஒருங்கிணைக்கும் தொழில் நுட்பத்தில் வெற்றி பெற்றுள்ள 4 நாடுகளில் ஒன்றாக இந்தியா மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். தற்போது நிலவை சுற்றி வரும் செயற்கை கோள்களில் மிக திறன் வாய்ந்த கேமராவுடன் கூடிய செயற்கை கோள் இந்தியாவிற்கு உரியது என்றும் அவர் தெரிவித்தார்.

***<u>கப்பல்</u>***

நீல பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு, அண்மையில் முடிவடைந்த நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத் தொடரில், கடல் சார் துறை சார்ந்த பழைய மசோதாக்களுக்கு பதிலாக 5 முக்கிய மசோதாக்களை நிறைவேற்றி இருப்பதாக மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார். இந்திய துறைமுகங்கள் மசோதா, சரக்கு அனுப்புகைச் சீட்டு மசோதா ஆகியன இதில் அடங்கும் என்று அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

***<u>சிபி ராதாகிருஷ்ணன்</u>***

தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிக்கள் இன்று புதுடெல்லியில், குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான கூட்டணி வேட்பாளர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்து பாராட்டு தெரிவித்தனர். திரு பிரல்ஹாத் ஜோஷி, திரு மனோகர் லால், திரு அர்ஜுன்ராம் மேக்வால் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், டெல்லி, அரியானா மற்றும் ராஜஸ்தான் மாநில எம்பிக்களும் இதில் அடங்குவர். குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான வேட்புமனு தாக்கல் நேற்று முடிவடைந்ததைத் தொடர்ந்து வேட்புமனு பரிசீலனை இன்று மேற்கொள்ளப்படுகிறது. தேர்தல் அடுத்த மாதம் 9-ஆம் தேதி நடைபெறும். நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களும்

தேர்தலில் வாக்களித்து, புதிய குடியரசு துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க உள்ளனர்.

*அமித் □ ா*

முன்பு தமிழகத்தை சேர்ந்த டாக்டர் ஏபிஜே அப்துல்கலாமை குடியரசு தலைவர் பதவியில் அமரச் செய்த தேசிய ஜனநாயக கூட்டணி தான், தற்போது, தமிழகத்தைச் சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணனை குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று மாலை நெல்லையில் பாரதிய ஜனதா கட்சியின் பூத் கமிட்டி மாநாட்டில் உரையாற்றிய அவர், தமிழ் மண், மொழி மற்றும் பண்பாட்டை, பிரதமர் திரு நரேந்திர மோடி எப்போதுமே மதித்து வந்திருப்பதாக கூறினார். முன்னதாக, கேரள மாநிலம் கொச்சியில், வளர்ச்சி தொடர்பான, மலையாள மனோரமா நாளேட்டின் உச்சி மாநாட்டை திரு அமித் ஷா தொடக்கி வைத்தார். கேரளத்தில், முழு எழுத்தறிவு, அதிக சுற்றுலா வாய்ப்புகள், மற்றும், வெளிநாடு வாழ் இந்தியர் எண்ணிக்கை போன்ற சாதகமான பல அம்சங்கள் உள்ள போதிலும், விசித்திரமான சில கொள்கைகள் காரணமாகவே வளர்ச்சி தடைபடுவதாக அவர் கூறினார். கொச்சியில் மாநில பிஜேபி நிர்வாகிகள் கூட்டத்திலும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டார்.

*சென்னை-தினம்*

1639-ஆம் ஆண்டு, அப்போதைய சென்னப் பட்டணம் கிழக்கு இந்திய கம்பெனியால், விஜயநகர சாம்ராஜியத்திடம் இருந்து வாங்கப்பட்ட நாள் சென்னை தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

***<u>சென்னை-தினம்</u>***

நாட்டிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள 6-ஆவது நகரமான சென்னை நகரம், லண்டனுக்கு அடுத்தபடியாக, உலகிலேயே 2-ஆவது மிகப் பழைய மாநகராட்சியாகவும் திகழ்கிறது. சென்னப் பட்டணம் என்ற பெயர், பின்னர் மதராச பட்டணம், மதராஸ் என மாற்றி வழங்கப்பட்ட நிலையில் தமிழக அரசு 1996-ஆம் ஆண்டு, மதராஸ் என்ற பெயரை, சென்னை என்பதாக அதிகாரப்பூர்வமாக மாற்றி அறிவித்தது. சென்னை நகரின் மரினா கடற்கரையும், பாரம்பரியக் கட்டிடங்களும் உலகப் புகழ்பெற்றவை. பல்வேறு மொழிகள் மற்றும் கலாச்சாரங்களின் சங்கமமாகத் திகழும் சென்னை நகரம், வந்தாரை வாழ வைக்கும் நகரமாகப் போற்றப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

***<u>புதுச்சேரி-பெண் குழந்தை</u>***

புதுச்சேரியில் புதிதாக பிறந்த பெண் குழந்தைகளுக்கு,வங்கி கணக்கில் தலா 50 ஆயிரம் ரூபாய் செலுத்தும் வகையிலான, முதலமைச்சரின் பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வங்கி கணக்கு அட்டைகளை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், இன்று பயனாளிகளிடம் வழங்கினார். அரசுத் துறை அதிகாரிகள், என்ஆர் காங்கிரஸ் பிரமுகர்கள் மற்றும் பொது மக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***<u>ஏனாம்-வெள்ளம்</u>***

ஏனாமில் கோதாவரியின் கிளை நதியான கவுதமி ஆற்றில் வெள்ள அபாயம் தொடர்ந்து நீடிக்கிறது. நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் வினாடிக்கு சுமார் 13 லட்சத்து 43 ஆயிரம் கனஅடி நீர் கடலுக்கு திறந்து விடப்படுகிறது. தவ்லேஸ்வரம் அணைப் பகுதியில் நீர் பாசனத் துறையினர், வெள்ள அபாயம் குறித்து 2-ஆவது எச்சரிக்கை விடுத்துள்ளனர். வெள்ள பாதிப்புகளுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள

தரியல்திப்பா மற்றும் அய்யண்ண நகர் பகுதிகளை, மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி இன்று நேரில் பார்வையிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். தாழ்வான பகுதிகளில் புகுந்துள்ள வெள்ள நீரை வெளியேற்றும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*__ஏனாம்-ஓஎன்ஜிசி__*

இதற்கிடையே, ஏனாம் அருகே 3-ஆம் எண் தீவில் நேற்று நள்ளிரவு ஓஎன்ஜிசி எரிவாயு குழாய்ப் பாதை வெடித்து தீப்பிடித்ததை, தரியல்திப்பா கிராம வாசிகள் கண்டு, காவல் துறைக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து, தீயணைப்பு படையினர் விரைந்து வந்து, தீயணைப்பு பணியில் ஈடுபட்டனர். ஏனாம் அதிகாரிகள் உடனடியாக ஓஎன்ஜிசி அதிகாரிகளை தொடர்பு கொண்டு, குழாய் பாதையில் எரிவாயு அனுப்பப் படுவதை நிறுத்தினர். பின்னர் தீ முற்றிலும் அணைக்கப் பட்டதாக, ஏனாம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு சி கோதண்டராம் தெரிவித்தார்.

*__சாதனை-நிகழ்வு__*

புதுச்சேரியில் கலை மாமணி விருதாளர் சங்கம் சார்பில் முருங்கப்பாக்கம் திரவுபதி அம்மன் கோவில் தெருவில் நடைபெறும் விழாவில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து 80 கலை குழுக்களைச் சேர்ந்த சுமார் 700 கலைஞர்கள் கலந்து கொண்டு, தொடர்ந்து 79 மணி நேரம் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கும் வகையிலான ஈச் உலக சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மத நல்லிணக்கம், ஜனநாயக வாக்குரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போதை ஒழிப்பு மற்றும் இரத்த தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இயல், இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் மற்றும் யோகா கலைகளை இவர்கள் நிகழ்த்தி வருகின்றனர். ஈச் உலக சாதனை அமைப்பின் நிறுவன தலைவர் டாக்டர் தமிழ்வாணன் நேற்று தொடக்கி வைத்த இந்நிகழ்வு,

இடைவிடாமல் நடைபெற்று வரும் ஞாயிற்றுக்கிழமை முடிவடைய உள்ளது.

<u>வானிலை</u>

வளிமண்டல கீழடுக்கு சுழறச்சி காரணமாக, இன்றைய தினம் தமிழகத்தில் ஒருசில இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் உட்பட 10 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 28-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, சென்னை மாவட்டம் ஒக்கியம் துரைபாக்கத்தில், 12 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

<u>கணிப்பொறி-சில்லு</u>

வடிவமைப்புடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ், கணிப்பொறி சில்லுகளை வடிவமைப்பதற்கான 23 தொழில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கண்காணிப்பு கேமராக்கள், மின்சார பயன்பாட்டிற்கான அளவீட்டு கருவிகள் மற்றும் நெட் ஒர்க்கிங் தேவைகளுக்கு ஏற்றதாக இந்த கணிப்பொறி சில்லுகள் அமையும் என, மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது, சர்வதேச தரம் வாய்ந்த தானியங்கி வடிவமைப்பு கருவிகளை அணுகும் அனுமதியும், 72 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.